# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
## 2012 / 2013 (டிசம்பர் - 2017)

**HYS 3243 Ancient Indian Social Theories and Insitutions until 1206**

**HYS 3243 புராதன இந்தியாவின் சமூகக் கோட்பாடுகளும் நிறுவனங்களும் 1206 வரை**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படலாம்.

---

### பகுதி – I

01. மேல்வரும் தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு புராதன இந்தியாவின் சமூகக் கட்டமைப்பை ஆராய்வதற்கு உதவும் மூலாதாரங்களை விளக்குக.
(அ) சமூக வகுப்புக்கள்
(ஆ) பொருளாதாரம்
(இ) பண்பாட்டு அம்சங்கள் (20 புள்ளிகள்)

02. முற்பட்ட வேதகாலம் தொடர்பான மேல்வரும் தலைப்புக்களை மையமாகக்கொண்டு கருத்துரை எழுதுக.
(அ) சமூகம்
(ஆ) அரசியல் (20 புள்ளிகள்)

03. மேல்வரும் தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு குப்தர் கால நிர்வாக முறையின் முக்கியத்துவம் பற்றி நுணுகி ஆராய்க.
(அ) அரசியல் நிர்வாகம்
(ஆ) இராணுவ நிர்வாகம்
(இ) சமூக நீதி நிர்வாகம் (20 புள்ளிகள்)

### பகுதி – II

04. தர்ம சூத்திரங்கள் கூறும் புராதன காலச் சமூக நிலைமைகளைப் பரிசீலிக்குக. (20 புள்ளிகள்)

05. அர்த்த சாஸ்திரம் காட்டும் அரச தத்துவங்கள் பற்றிச் சுருக்கமாக ஆராய்க. (20 புள்ளிகள்)

06. பேரரசன் அசோகன் பின்பற்றிய தர்மக் கொள்கைகள் பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

07. மௌரிய காலச் சமூகப் பண்பாடுகள் குறித்துக் கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

**அல்லது**

மேல்வரும் தலைப்புக்களில் இரண்டைத் தெரிவு செய்து வரலாற்றுக் குறிப்பெழுதுக.
(அ) புராதன இந்தியாவில் பௌத்தம்
(ஆ) விஜய நகர காலத்து தொழில்கள்
(இ) மௌரியப் பேரரசின் நிர்வாகம் (1 x 10 x 2 = 20 புள்ளிகள்)